KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 6, No. 03 (2026)

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Impact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/kalanjiyam.v6i03.69

UGC Approved by Transparent Peer Review

ARTICLES

குறிஞ்சித்தேன் நாவலில் வாழ்ந்த வெளி : எட்வர்ட் வில்லியம் சோஜாவின் வெளிக் கோட்பாட்டுப் பார்வை

KURINJITHEN NOVELIL VAAZHNTHA VELI : EDWARD WILLIAM SOJAAVIN VELIKOTPAATTU PAARVAI

A. KEERTHANA[1,*], Dr P. PENNARASI[2]

[1] (Reg No: BDU2410632780965) Full Time Research Scholar, Research Department of Tamil, Thanthai Periyar Government Arts and Science College (A), Tiruchirappalli – 620 023, (Affiliated to Bharathidasan University) Tamil Nadu, India.

[2] Research Guide, Associate Professor, Research Department of Tamil, Thanthai Periyar Government Arts and Science College (A), Tiruchirappalli – 620 023, (Affiliated to Bharathidasan University) Tamil Nadu, India,

***Corresponding author:** A. KEERTHANA, keerthiananth2000@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 1 November 2026
Revised: 11 November 2026
Accepted: 15 November 2026

Article ID
KIJTS-2026-0053

Peer review
Double-blind peer review

Keywords
Kurinjithen
Third Space Theory
Social Identity
Cultural Memory
Geographical Space
Lived Space
Experience Space.

ABSTRACT

The habitat structure of the hill people featured in the novel Kurinjithen is classified through Edward Soja's Third Space theory. Through First Space, an analysis of the geographical and natural environment is carried out. Through Second Space, the mental space, memories, beliefs and ideological records of the characters are presented. Based on Third Space, the social, cultural and economic lifestyle changes of the hill people are explained. It highlights the conflicts between tradition and modernity, the violence occurring on the land, land rights, and social experiences portrayed in the novel. This research is undertaken to examine and establish that the Kurinji land is not merely a geographical backdrop, but a lived space shaped by human experiences, memories, social relationships and power struggles.

How to cite this article: A. KEERTHANA, & Dr P. PENNARASI (2026). *குறிஞ்சித்தேன் நாவலில் வாழ்ந்த வெளி : எட்வர்ட் வில்லியம் சோஜாவின் வெளிக் கோட்பாட்டுப் பார்வை. KALANJIYAM – International Journal of Tamil Studies*, *6*(03), 777. https://doi.org/10.63300/kalanjiyam.v6i03.68
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

கட்டுரையாளர் : ஆ. கீர்த்தனா (Reg No: BDU2410632780965)

முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை,

தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி(தன்னாட்சி),

திருச்சிராப்பள்ளி – 620 023.

(பாரதிதாசன் பல்கலைகழக இணைவு பெற்றது), தமிழ்நாடு, இந்தியா.

Email : keerthiananth2000@gmail.com

நெறியாளர் : முனைவர் ப. பெண்ணரசி

இணைப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,

தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி(தன்னாட்சி),

திருச்சிராப்பள்ளி – 620 023. (பாரதிதாசன் பல்கலைகழக இணைவு பெற்றது), தமிழ்நாடு, இந்தியா.

ஆய்வுச் சுருக்கம்

குறிஞ்சித்தேன் நாவலில் இடம்பெற்றுள்ள மலைவாழ் மக்களின் வாழ்விட அமைப்பு எட்வர்ட் வில்லியம் சோஜாவின் மூன்றாம் வெளிக்கோட்பாட்டின் வழி வகைப்படுத்தப்படுகின்றது. முதல் வெளி வழியாக புவியியல் மற்றும் இயற்கைச் சூழலைப் பகுப்பாய்வு செய்தல் இடம் பெறுகின்றது. இரண்டாம் வெளி வழியாக கதைமாந்தர்களின் மனவெளி, நினைவுகள், நம்பிக்கைகள் மற்றும் கருத்தியல் பதிவுகளை எடுத்துரைக்கின்றது. மூன்றாம் வெளி அடிப்படையில் மலைவாழ் மக்களின் சமூக, பண்பாட்டு, பொருளாதார வாழ்வியல் மாற்றங்கள் விளக்கப்படுகின்றது. நாவலில் வெளிப்படும் மரபுக்கும் நவீனத்துவத்திற்கும் இடையிலான முரண்பாடுகளையும், நிலத்தில் நிகழும் வன்முறைகளையும், நிலத்தின் மீதான உரிமைகளையும், சமூக அனுபவங்களையும் எடுத்துரைக்கின்றது. நிலம் வெறும் புவியியல் பின்னணியாக இல்லாமல் மனிதர்களின் அனுபவங்கள், நினைவுகள், சமூக உறவுகள், அதிகார மோதல்களால் உருவாக்கப்படும் வாழ்விடமாக அமைந்துள்ளது என்பதை ஆராய்ந்து நிறுவும் விதமாக இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

குறிப்புச் சொற்கள் : *குறிஞ்சித்தேன், மூன்றாம் வெளி கோட்பாடு, சமூக அடையாளம், பண்பாட்டு நினைவு, புவியியல் வெளி, வாழ்ந்த வெளி, அனுபவ வெளி.*

முன்னுரை

தமிழ் நாவல் இலக்கியத்தில் சமூக வாழ்வியலை மையப்படுத்தி எழுதப்பட்ட படைப்புகள் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளன. விளிம்புநிலை மக்களின் வாழ்க்கை, அவர்களுடைய பண்பாடு, இயற்கைச் சூழல், சமூகப் பொருளாதார நிலை, வாழ்வியல் நெருக்கடிகள் ஆகியவற்றைப் பதிவு செய்வது சமூகப் பார்வையிலான நாவல்களின் முக்கியப் பணியாகும். இத்தகைய படைப்புகளில் வெளி (நிலம்) என்பது கதையின் பின்னணியாக மட்டும் அமையாமல், வாழ்க்கையைத் தீர்மானிக்கும் முக்கியக் காரணியாகவும் விளங்குகின்றது. அவ்வகைமையில் அமைந்த நாவல்களுள் ஒன்று ராஜம் கிருஷ்ணனின் குறிஞ்சித்தேன். இந்நாவலை எட்வர்ட் சோஜாவின் வெளிக்கோட்பாட்டு நோக்கில் அணுகும்போது மலைவாழ் மக்களின் வாழ்விடம் எவ்வாறு சமூக அடையாளமாகவும் பண்பாட்டு நினைவாகவும் அமைகின்றது என்பதை ஆய்ந்துணர முடிகின்றது. எட்வர்ட் சோஜாவின் வெளிக்கோட்பாடு நிலத்தை புவியியல் வெளி, கருத்தியல் வெளி, வாழ்பனுபவ வெளி என்று மூன்றாகப் பகுத்து இவற்றின் தொடர்பை விளக்குவதோடு மனிதர்கள் தங்களுடைய நிலத்தை எவ்வாறு அனுபவிக்கின்றனர் என்பதையும் விளக்குகின்றது. இக்கோட்பாட்டின் வழி குறிஞ்சித்தேன் நாவலை ஆராய்ந்து விளக்கும் நோக்கில் இக்கட்டுரை அமைகின்றது.

எட்வர்ட் வில்லியம் சோஜா

மேலை நாட்டினரின் நவீன கோட்பாட்டு ஆய்வுகளை இலக்கியத்தில் பொருத்திப்பார்க்கும் திறனாய்வு அணுகுமுறை தற்காலத்தில் முக்கியத்துவம் பெற்று வருகிறது. அவ்வகையில் சமூக முக்கியத்துவம் சார்ந்த ஆய்வுகளில் வெளி (Space) குறித்த சிந்தனைகளை விரிவுபடுத்தி ஆராய்ந்தவர் எட்வர்ட் வில்லியம் சோஜா. அமெரிக்காவைச் சேர்ந்த புவியியல் அறிஞரான இவர் சிறந்த சமூகக் கோட்பாட்டாளராகவும் விளங்கியுள்ளார். 1996-இல் இவர் எழுதிய Third space: Journeys to Los Angeles and Other Real-and-Imagined Places என்ற நூல் வெளிக்கோட்பாட்டைப் புதிய கோணத்தில் அணுகும் நூலாகக் கோட்பாட்டாளர்களால் கருதப்படுகின்றது. நிலம் (வெளி) என்பது வெறும் புவியியல் அமைப்பு மட்டுமல்ல. அங்கு வாழும் மனிதர்களின் சமூக உறவுகள்,

அனுபவங்கள், கற்பனைகள், அதிகாரம் ஆகியவற்றால் உருவாக்கப்படுகின்றது என்ற கருத்தை முன்வைக்கும் சோஜா வெளியை மூன்றாகப் பகுத்துக் காண்கிறார். அவர் குறிப்பிடும் முதல் வெளி (First Space - The perceived / material space) என்பது கண்ணுக்குப் புலனாகக்கூடிய புவியியல் அமைப்பு. அதாவது காடு, மலை, வயல், கடல், மணல், கிராமம், வீடு, சாலை, ஆறு என நம் கண்களால் பார்த்து உணரக்கூடிய நிலம். இரண்டாம் வெளி (Second Space - The conceived / mental space) என்பது கருத்துக்குப் புலனாகக்கூடிய மனவெளி. அதாவது ஒரு நிலம் யாருக்குச் சொந்தமானது, நிலம் குறித்த அதிகாரம், உரிமை, எந்த இடம் தாழ்ந்தது, எந்த இடம் உயர்ந்தது என்னும் கருத்துருவாக்கம். மூன்றாம் வெளி (Third Space - The Lived Space) என்பது ஓர் இடத்தில் வாழும் மனிதர்கள் பெறும் அனுபவம், உணர்வு, நினைவு, போராட்டம், சமூக உறவு போன்றவை நிலத்துடன் எவ்வாறு தொடர்புறுகின்றன என்பதை வெளிப்படுத்தும் வாழ்ந்த வெளி அல்லது அனுபவ வெளி. இதனடிப்படையில் வெளியை 1. காட்சிவெளி 2. கருத்துவெளி 3. அனுபவவெளி என்று மூன்றாகப் பகுத்துக் காண முடியும் என்கிறார். இவர் கூறும் இந்த அணுகுமுறை தமிழிலக்கிய மரபில் தொல்காப்பியர் காலத்திலிருந்தே தொடர்ந்து வருகின்றது. எனினும் அதைப் பகுத்துப் பார்க்கும் முறை, கோட்பாட்டுடன் பொருத்தி ஆராயும் முறை தற்காலத்தில் தான் வேகம் பெற்று வருகின்றது. அவ்வகையில் சோஜாவின் மூன்றாம் வெளிக் கோட்பாடு குறிஞ்சித்தேன் நாவலில் பொருத்தி ஆராயப்படுகின்றது.

முதல் வெளி (First Space) : புவியியல் வெளி

தொல்காப்பியர் குறிப்பிடும் முதற்பொருளில் ஒன்றான நிலம் மனித ஒழுகலாறுகள் நிகழ்வதற்கு அடிப்படை ஆதாரமாக விளங்குகின்றது. ஐந்திணை ஒழுகலாறுகளில் நான்கு திணைக்கு மட்டும் தொல்காப்பியர் நிலங்களைச் சுட்டியுள்ளார். இதனை,

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்

……." (தொல். பொருள் அகம். 5)

எனும் நூற்பாவின் வழி அறியமுடிகின்றது.

நவீன இலக்கியத்தில் நிலம் ஒரு முக்கியக் கருப்பொருளாகும். நிலத்தின் மீது கட்டப்பட்ட கட்டிடத்தின் வாயிலாகப் பிடித்து வைக்கப்பட்ட "வெளி" தான் இன்று நிலமாக இருக்கிறது. வெளி என்ற சொல் பல பொருண்மைகளைக் கொண்டுள்ளது. மனிதன் நேரடியாக உணரக்கூடிய புவியியல் மற்றும் பொருள் சார்பு முறையின் அமைப்பு வெளியாக குறிக்கப்படுகின்றது.

"அது உயிர்கள் வாழ்கின்ற இடம், மனிதர்களுக்கு

இடையிலான பேச்சு இடைவெளித்தூரம், நிலத்திற்கு

மேல் உள்ள வானவெளி, வீடு, விளைநிலம்,

கட்டிடங்கள் அமைகின்ற வீதிகள், மனிதஉடல்

ஒவ்வொருவரையும் சுற்றியுள்ள கண்ணுக்குப்

புலனாகின்ற சுற்று வெளி, புலனாகாவெளி

போன்றவற்றை உள்ளடக்கியது" (கா.மா. ப.22)

என பேராசிரியர் காசிமாரியப்பன் வெளி குறித்து விளக்கியுள்ளார்.

எட்வர்ட் சோஜா முதல் வெளியை, **First space comprises both the tangible characteristics of space and the activities that occur within it." (P.338)**

என்று விளக்குகிறார்.

அதாவது முதல் வெளி என்பது உண்மையான பொருள் சார்ந்த உலகத்தைக் குறிக்கின்றது. நாம் அன்றாட வாழ்வில் நேரடியாகச் சந்திக்கும் தொட்டுணரக்கூடிய கண்களால் காணக் கூடிய இடங்களையும் வெளி அமைப்புகளையும் இது பிரதிபலிக்கிறது என்கிறார்.

குறிஞ்சித்தேன் நாவலில் புவியியல் பின்னணியாக நீலகிரி மரகத மலைப்பகுதியும், காடும், மக்களின் குடியிருப்புகளாக இருக்கும் ஹட்டிகள் எனக் குறிப்பிடப்படும் வாழ்விடங்களும் வெளியாக ஆய்வில் அமைகின்றது.

"முப்புறமும் மரகதக் குன்றுகள் சூழ, நடுவே விளங்கிய

அந்தக் குடியிருப்புக்கு மரகதமலை ஹட்டி என்றே பெயர்" (கு.தே, ப.2)

"பூமித்தாய்க்கு வண்ண ஆடைகள் அணிவித்தாற் போல் தோன்றும் விளைநிலங்கள்" (கு.தே, ப.19)

என்று நாவலில் குறிப்பிடுவதன் வாயிலாக குடியிருப்பு சார்ந்த பகுதிகள் எவ்வாறு இருந்தது என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது. குடியிருப்பு நிலங்கள், தொழில், உணவு, உடை, சமூக உறவுகள் ஆகியவை நாவலில் இயற்கை அமைப்போடு தொடர்புடையதாகவே இருக்கின்றது.

இரண்டாம் வெளி (Second Space) : (மனவெளி)

எட்வர்ட் வில்லியம் சோஜா இரண்டாம் வெளியை,

"Second space incorporates the social, cultural, and psychological factors that influence our perceptions and experiences of space." (P.351)

என இவ்வெளி மனிதர்களின் சிந்தனை, கற்பனை, கருத்தியல் மற்றும் மனப்பதிவுகளின் அடிப்படையில் உருவாகும் மன வெளியைக் குறிக்கிறது. குறிஞ்சித் தேன் நாவலில் மலை, பூக்கள், அருவி, காடு, மரம், புல்வெளி ஆகிய இயற்கைக் கூறுகள் மனிதர்களின் மனநிலையோடு இணைந்து செயல்படுவதாக காட்சிப்படுத்தப்படுகின்றன.

"பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நீலக்குறிஞ்சி

மலராடை புனைந்து கொள்ளை அழகின்

குவியலாய்த் தோன்றும் அந்த மலைப் பிரதேசத்தில்

அந்த நீலம் பூக்கும் பேராண்டு" (கு.தே, ப.1)

என நாவலின் வழி நீலக் குறிஞ்சிப் பூவின் தன்மை தலைமுறைகளை நினைவு கூறும் குறியீடாக அமைகின்றது.

அருவிக்கரையோரம் உள்ள முருகனின் அம்சமான வேங்கை மரத்தைக் கடந்து செல்கையில் பாருவோடு கொண்ட காதலை நினைவுபடுத்துவதாக கிருஷ்ணன் நினைக்கிறான். இதனை,

"மஞ்சள் பூங்கொத்துகளுடன் வேங்கை மரத்தடியில்

கிருஷ்ணனும் பாருவும் சந்தித்து பேசிய நினைவுகள்" (கு.தே, ப.222)

என்று விவரிக்கிறார் ஆசிரியர்.

கதையின் தலைவனான நஞ்சன், அவன் கல்லூரியில் படித்த நாட்களை,

"சக மாணவர்களுடன் எடுத்துக் கொண்ட புகைப்படங்கள் பரிசுப் புத்தகங்களை பார்த்தபோது அந்த அந்தச் சம்பவங்களுக்கு உரிய நினைவுகளோடு அனுபவித்துப் பார்த்தான்" (கு.தே, ப.280)

என்று நினைத்துப் பார்த்ததாக இடம்பெறும் பகுதி வாழும் மனிதர்களின் நினைவு இடத்தோடு அதாவது வெளியோடு தொடர்புடையதாகச் சித்தரிக்கப்பட்டுள்ளதை உணரமுடிகிறது.

"ஒவ்வோர் இடமும் ஒவ்வோர் சிறுபொருளும் கதவும் சுவரும் நினைவுகளை வாய்விட்டுச் சொல்வது போல் இவ்விடத்தை விற்று வேற்றிடம் போகிறோம்" (கு.தே, ப.233)

என்ற ஜோகியின் நிலை பிறந்து வளர்ந்த இடத்தை விட்டு வேறு இடம் நோக்கிச் செல்லும் வாழ்வை உணர்த்துகிறது. இவ்வாறாக நிலம் என்பது வெறும் இடமல்ல, மக்கள் வாழ்வியலோடு ஒன்றி அது நினைவாக இருக்கின்றது என்பதை கதை அறிவுறுத்துகின்றது

***மூன்றாம் வெளி* (Third Space) : (அனுபவ வெளி)**

எட்வர்ட் வில்லியம் சோஜா மூன்றாம் வெளியை வெறும் இயற்பியல் சார்ந்த இடமாகவோ அல்லது மனதில் உருவாகும் கருத்தியல் வெளியாகவோ அமையாமல் மனிதர்களின் வாழ்வியல் அனுபவங்கள், நினைவுகள், பண்பாடு, உரிமைகள் மற்றும் சமூக உறவுகள் ஒன்றிணைந்து உருவாக்கும் அனுபவ வெளியாக விளங்குகிறது என்கிறார். இதனை,

"Third space comprises the lived experiences, narratives, memories, and imaginations that influence our understanding and engagement with the physical world." (p. 370)

என்று குறிப்பிடுகின்றார். மூன்றாம் வெளி என்பது இரண்டாம் வெளியின் எதிர்பார்ப்புகள் வழியாக உணரப்படும் முதல் வெளியின் வாழ்க்கை அனுபவமாகும்.

உறவு முறைகளில் மனிதனுக்கும் அவன் வாழும் மண்ணுக்கும் இடையிலான உறவு வாழ்வியல் அடையாளத்தின் அடிப்படையிலும் அமைகின்றது என்பதை நாவலில் தந்தைக்கும் மகனுக்குமான உறவோடு மண் ஒப்பிடப்பட்டுள்ளதன் வழி அறிய முடிகிறது. இதனை,

> **"தந்தையிடமிருந்து பெற்றிருந்த செல்வம் உயிரோடு உணர்வோடு ஊறியிருந்த மண் பாசந்தான்" (கு.தே, ப.81)**

எனும் வரிகளின் வாயிலாக உணர முடிகின்றது.

தன் உயிருக்கும் மேலாக மண்ணை மக்கள் வணங்கியுள்ளனர் என்பதை,

> **"மண் என் உயிரின் சாரம்; வாழ்வின் இன்பம்.**
>
> **மண் என் குழந்தை; எல்லாம் இதுவே" (கு.தே, ப.197)**

என்று பாரு கூறுவதன் வழி உணர முடிகின்றது.

மக்களின் குடும்ப வாழ்வியல் முறையை அவரவர்களுடைய நிலத்தை வைத்தே பிறர் அறிந்து கொள்ள முடிவதை,

> **"குத்துச் செடிகளும் களைகளும் தான்**
>
> **தோன்றிகளாய்க் காணும் விளைநிலம்" (கு.தே, ப.19)**

என்று ஆணும் பெண்ணும் ஒத்துவாழாத குடும்ப நிலையை அவர்கள் நிலமே தெரிவிப்பதாகக் கூறும் ஆசிரியரின் கருத்து எண்ணத்தக்கது. நில உரிமையாளரின் குணநலன்களை எடுத்துரைக்கும் காரணியாக நிலம் இருப்பதை,

> **"சோம்பலை உடையவனின் உடைமை நான் என்று**
>
> **ஆங்காங்கே தரிசாகக் கிடக்கும் பூமி" (கு.தே, ப.19)**

என்பதில் இருந்து அறிந்து கொள்ள முடிகின்றது.

பண்பாட்டு அடையாள உருவாக்கம்

ஒரு சமூகத்தின் பண்பாட்டு அடையாளம் நிலம், மொழி, உணவு, உடை, வழிபாடு, பழக்க வழக்கங்கள், உணவுமுறை, தொழில் ஆகியவற்றின் வழியாக வெளிப்படுத்தப்படுகின்றது. ஒரு ஹட்டி மக்கள் அவர்களின் சுக துக்கங்களை மற்றவர்களும் பங்கிட்டு ஒற்றுமையாக வாழ்ந்த சூழலை,

> **"ஒருவர் விதைக்கும் சமயமோ, அறுவடையின்போதோ**
>
> **நோய்வாய்ப்பட்டுவிட்டால், அன்னார் குடும்பத்துக்கு**

அனைவரும் பங்கிட்டு உழைப்பை நல்கி கண்டு

முதல் அனுப்பும் பண்பல்லவோ" (கு.தே, ப.178)

என வரும் பகுதி குறிப்பிடுகின்றது. இதன்வழி மலைவாழ் மக்களிடம் இருந்த ஒற்றுமை உணர்வு வெளிப்படுகின்றது. மண்ணையும் நீரையும் காற்றையும் தந்து வற்றாத வளமைக்கு வழிகாட்டும் இறைவனுக்கு நன்றி செலுத்தும் விதமாக வழிபாடு செய்வதை,

"மண்ணில் இட்ட விதை மண்டிப் பயன்தர, கன்று

காலிகள் பல்கிப் பெருக, பாலும் தேனும்

பஞ்சமின்றிப் பொங்கிப் பொழிய செய்யும்

முயற்சிகளெல்லாம் கைகூட வேண்டி" (கு.தே, ப.131)

என்ற வரிகளின் வாயிலாக அறியமுடிகின்றது. பூமி விளைவைக் காப்பதற்கும் பெருக்குவதற்கும் பழைய சம்பிரதாயங்களை, வழக்கங்களை கடைப்பிடித்து வந்தனர் என்பதும் தெளிவாகிறது. பால் மனையில் புகுவதற்கான உரிமைச் சடங்கு அவர்களுக்கு புனிதமான சடங்காகக் குறிப்பிடப்பட்டுள்ளது. செய்யும் தொழிலை இறைவனுக்குச் செய்யும் பூசையோடு ஒப்பிடுவதை,

"இறைவனை வழிபடுகையில் கடைபிடிக்கும் புனித

விதிகள் அனைத்தும் பால்கறக்கும் சடங்கைச்

செய்கையில் கடைபிடிக்க வேண்டியவை" (கு.தே, ப.22)

என்று நாவல் எடுத்துரைக்கின்றது.

முன்னோரை வழிபடும் முறைகளும், தலைமுறை தலைமுறையாகப் பின்பற்றும் வழிபாடுகளையும் மலைவாழ் மக்கள் தொடர்கின்றனர் என்றும் அறிய முடிகின்றது.

நிலத்தின் மீதான உரிமையும் பொருளாதார மாற்றங்களும்

நிலம் என்பது மனிதனின் வாழ்வாதாரத்திற்கான இயற்கை வளமாக மட்டுமில்லாமல் பொருளாதார நிலை, வாழ்வியல் உரிமையோடும் தொடர்புடையது. குறிஞ்சித் தேன் நாவலில் வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, உணவு உற்பத்தி போன்ற செயல்பாடுகள் நிலத்தைச் சார்ந்தே நடைபெறுகின்றன. லிங்கையா, பாரு, ஜோகி வாயிலாக நிலத்தின் மீதான உரிமைகளை ஆசிரியர் எடுத்துரைக்கிறார்.

"தீயும் நோயும் இதை என்னிடம் இருந்து பிரிக்க

முடியாது; பிடுங்கிவிட முடியாது; என் மண்" (கு.தே, ப.197)

என பாரு தன் மண் மீதான உரிமையை வெளிப்படுத்துவதைக் கூறுகின்றார்.

"மண்ணை மறந்த துரோகி! இந்த மண் தான் காலம்

காலமாய்ச் சோறு போடுவதென்று தெரியுமாடா

உனக்கு" (கு.தே, ப.284)

என்று மண்ணை பிறருக்கு விட்டுத்தர முடியாமல் தவிக்கும் ஜோகியின் நிலையை எடுத்துரைக்கின்றார்.

கால்நடைகளுக்கு உணவாக இருந்த நிலங்களை அழித்து பொருளாதார தேவைக்காக மாற்றியதை,

"குன்று குன்றாக புற்சரிவுகள் விட்டு வைத்த

காலம் மலையேறிவிட்டது, எங்கும் தேயிலை" (கு.தே, ப.230)

என்று வெளிப்படுத்துகிறார். மரபுவழியாக உணவுப் பயிர்களை பயிரிட்ட நிலங்களில் பணம் பெருக தேயிலை மற்றும் காபித் தோட்டங்களாக மாற்றப்பட்டதை,

"மண்ணில் விளைவித்து பணத்தின் ருசி அறிந்திராத

மக்களில் பலரும் தேயிலை போட வேண்டும்

பணம் குவிக்க வேண்டும்" (கு.தே, ப.142)

என்ற இலட்சியத்துடன் மண்ணில் உழைக்கத் துவங்கினார்கள் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

தேயிலைத் தோட்டங்கள் பெருக்குவதில் ஒவ்வோர் ஆண்டும் முயற்சியை பெருக்கி வந்த கரியமல்லர் குடும்பத்தில் பொருளாதார நிலை உயர்ந்ததை,

"தேயிலை தந்த பணம் காரைக்கட்டு வீட்டை

மாடி மனையாக உருவாக்கிவிட்டது" (கு.தே, ப.142)

என்ற வரிகளில் உணர்த்தியுள்ளார். இந்த மாற்றங்கள் விளை நிலங்களை அழித்து, பொருளாதார தேவைக்காக மாற்றம் பெற்றதை விளக்குகின்றது.

சமூக அனுபவங்கள் ஒன்றிணைந்த வாழ்வியல் வெளி

எட்வர்ட் வில்லியம் சோஜா நாம் வாழும் பெரும்பாலான இடங்கள் சமூகத்தால் கட்டமைக்கப்பட்டவை என்றும், இச்சமூக இடங்கள் கட்டமைக்கப்படும் விதம் நமது அன்றாட வாழ்க்கையில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதையும் குறிப்பிடுகின்றார். இதனை,

"Most of our lived spaces are socially constructed indicating that humans have an impact on other human beings and the ways in which our cities and social spaces are constructed, can have a big impact on our daily lives." (P. 226)

என்று விளக்குகிறார்.

குறிஞ்சித் தேன் நாவலில் மூன்று தலைமுறையினரின் வாழ்க்கை வழியாக சமூக மாற்றங்கள் எடுத்துரைக்கப்படுகின்றன. லிங்கையா, ஜோகி, நஞ்சன் ஆகியோரின் வாழ்க்கை அனுபவங்கள் வெவ்வேறு காலக்கட்டங்களில் ஏற்படுத்திய சிந்தனை மாற்றங்களை வெளிப்படுத்துகின்றன.

"உழைக்காமல் விதைக்காமல் பிறர் கையேந்தி

உண்ணும் நிலைக்கு வந்துவிட்டேனே!" (கு.தே, ப.108)

என்று லிங்கையா கூறுவதிலிருந்து மரபுவழி இயற்கை சார்ந்து உழைத்து உணவு உண்ணும் வாழ்க்கையின் அடையாளமாக அவர் திகழ்வதை அறியமுடிகின்றது.

"பொருந்தாத சம்பிரதாயங்களை நாம் விடுவதே நல்லது.

காலத்திற்கேற்ப நாமும் நம் வழக்கங்களில் சிலவற்றை

மாற்றிக் கொள்வதே நல்லது" (கு.தே, ப.168)

என லிங்கையா இறப்பில் வழிவழியாக பின்பற்றப்படும் மரபுகளை தவிர்க்கும் ஜோகியின் நிலை புதிய சமூக மாற்றத்திற்கான போராட்டத்தின் வெளிப்பாடாக அமைகின்றது.

"நாம் மட்டும் இந்த மண்ணிலேயே

கிடப்பதா? முன்னேற வேண்டாமா?" (கு.தே, ப.301)

என்று நஞ்சன் கூறுகிறான். கல்வி கற்ற நஞ்சனின் இக்கூற்று புதிய சமூக மாற்றத்திற்காக போராடும் அவனது நிலையை வெளிப்படுத்துகின்றது. இவ்வாறாக இந்த நாவல் தனிமனிதனின் வாழ்க்கையை மட்டும்

எடுத்துரைக்காமல், ஒரு சமூகத்தில் தலைமுறைகளின் வழி நிகழும் மாற்றங்களையும் அந்த மாற்றங்கள் அவர்கள் வாழும் வெளி சார்ந்து நிகழ்வதையும் வெளிப்படுத்துகின்றது.

நவீனமயமாக்கல்

ஒட்டுமொத்த சமூகமும் எவ்வாறு நவீனமயமாகிறது என்பதையும், காலமாற்றங்களால் சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்றவாறு மக்கள் தங்களை மாற்றிக் கொள்ளும் தன்மையுடையவர் ஆகிறார்கள் என்பதையும் எட்வர்ட் சோஜா விளக்குகிறார்.

"Rather than an actual force in the shaping of society and theory, space became a reflective mirror of societal modernization." (P.250)

என்று "சமூகம் மற்றும் கோட்பாட்டை வடிவமைக்கும் ஒரு உண்மையான சக்தியாக இருப்பதற்குப் பதிலாக இடம் (Space) என்பது சமூக நவீனமயமாக்கலின் பிரதிபலிப்புக் கண்ணாடியாக மாறியது" என கூறியுள்ளார். நாவலில் நவீனமயமாக்கல் சமூக முன்னேற்றத்தைக் குறிக்கும் கருத்தாக மட்டுமல்லாது மரபுவழி வாழ்க்கையை மாற்றியமைக்கும் புதிய சிந்தனை வெளியாகவும் அமைகின்றது. கிருஷ்ணன், நஞ்சன், அர்ஜுனனின் வழியாக புதிய சிந்தனை வெளி நாவலில் எடுத்துரைக்கப்படுகின்றது. கல்வி, நகர வாழ்க்கை, புதிய தொழில்கள், நகர்ப்புற வசதிகள், பொருளாதார முன்னேற்றம், நில மாற்றங்கள் ஆகியவை நாவலின் வழியே வெளிப்படுத்தப்படுகின்றது.

நாவலின் வாழிடமான மரகத மலையில் முதன்முதலில் கல்வி கற்றவனாக கிருஷ்ணனைக் காட்சிப்படுத்துகிறார் ஆசிரியர். அவன் கற்ற கல்வி,

"அவர்கள் இனத்துக்கே, குலத்துக்கே, மண்ணுக்கே பெருமை உண்டாகும்" (கு.தே, ப.67)

என்று அவனது உறவினர்கள் கருதுகின்றனர். கல்வியறிவு இல்லாத ஒரு கூட்டத்தில் கல்வி கற்ற கிருஷ்ணன் அவன் வாழ்ந்த வெளியோடு தொடர்புபடுத்தப்படுகின்றான்.

"உதகை நகரத்தெருக்களில் வடநாட்டாரின் துணிக்கடைகள், சாமான்கடைகள், சிற்றுண்டிச் சாலைகள், விடுதிகள், வரிசையாக விளக்குகள் பள்ளிக்கூடங்கள்" (கு.தே, ப.76)

இருப்பதைக்கண்டு நஞ்சன் வியப்பதாக ஆசிரியர் பதிவு செய்துள்ளார். ஒரு காலத்தில் எந்த வசதியும் இல்லாத மலைநாடு கால மாற்றத்தால் வசதிகள் நிரம்பிக் காட்சியளிப்பதைப் பதிவு செய்துள்ளதன் வழி மலை கிராமங்கள் நவீனமாக்கலில் பொலிவு பெற்றுத் திகழ்வதை உணரமுடிகின்றது. அதாவது சோஜாவின் பார்வையில் வாழும் வெளியும் மாற்றத்திற்கு உட்பட்டது தான் என்பது புலப்படுகின்றது. மேலும்,

"கிராமங்கள் வேறு பட்டணங்கள் வேறு என்பதில்லை நம் ஹட்டிகளிலெல்லாம் எல்லாவித வசதிகளும் வரும்" (கு.தே, ப.301)

என்று தன்னுடைய ஹட்டிகளிலும் நகரத்திற்கு இணையான வசதிகளை பெருக்க வேண்டும் என்ற சிந்தனை நஞ்சனிடம் வெளிப்படுகின்றது.

"நீங்கள் மக்களின் நன்மைக்காக இனிவரும் உலகுக்காக உங்கள் மண்பாசத்தைக் கொஞ்சம் தியாகம் செய்யத்தான் வேண்டும்" (கு.தே, ப.301)

என்று மரபை அழித்து நவீனத்தை விரும்பும் நஞ்சனின் தலைமுறையை விளக்குகின்றது.

"இனி விழிப்படையாத சமுதாயம் இல்லை என்ற வகையிலே புதுமலர்ச்சி பெற்றதை மலை மக்களின் கொண்டாட்டம்; புதுவிழிப் பெய்தி முன்னேற்றப் பாதையில் நடைபோடும் நிகழ்வு குமரியாற்றின் அணை திறக்கப் பெற்றது." (கு.தே, ப.339)

என்ற வரிகளின் வாயிலாக பின்தங்கி இருந்த மலைவாழ் மக்களின் சமுதாயம் ஓர் அற்புதமான வருங்காலத்தை ஆக்கவிழிப்புக் கொண்டு துடிதுடிக்கும் இளைஞர் உலகை படைத்து, முன்னேற்றப் பாதையில் ஒளிர்ந்தது என ராஜம் கிருஷ்ணன் பதிவு செய்கிறார்.

முடிவுரை

குறிஞ்சித்தேன் நாவலின் வழி மலைவாழ் மக்களின் உண்மையான வாழ்க்கை அனுபவங்களும், சமூக மாற்றங்களும் பல்வேறு பரிமாணங்களில் வெளிப்படுகின்றன. புவியியல் வெளி வெறும் இயற்கை நிலப்பரப்பாக அமையாது, மனிதர்களின் வாழ்வாதாரம், பண்பாட்டு மரபுகள், சமூக நினைவுகள், கற்பனைகள், பொருளாதார செயல்பாடுகள் ஆகியவற்றைப் பற்றி எடுத்துரைப்பதாக அமைகின்றது. நிலம் சார்ந்த பிணைப்பு, உரிமை, அதற்கான போராட்டம், தேயிலை மற்றும் காபித் தோட்டங்களின் விரிவாக்கம், பொருளாதாரநிலை உயர்வு ஆகியவை முக்கியத்துவம் பெறுகின்றது. நிலம் ஒரு குழுவின் கலாச்சார அடையாளமாகவும் பண்பாடாகவும் விளங்குகிறது. நவீன இலக்கியத்தில் நிலம் சமூக தாக்கங்களை வெளிப்படுத்தப் பயன்படுகிறது. நகர்ப்புற வாழ்க்கையின் மீதான ஈர்ப்பு, கல்வி, பொருளாதார மாற்றங்கள் நாவலில் முக்கியத்துவம் பெறுகின்றது. நிலம் மனித நினைவோடு ஒன்றிய உணர்வு என்பது எட்வர்ட் வில்லியம் சோஜாவின் மூன்றாம் வெளி கோட்பாட்டுப் பார்வையில் ஆராய்ந்து விளக்கப்பட்டுள்ளது.

துணை நூற்பட்டியல்

References

[1.] இளம்பூரணர், உரையாசிரியர். தொல்காப்பியம்: பொருளதிகாரம். முதற்பதிப்பு, சாரதா பதிப்பகம், 2005.

[2.] காசிமாரியப்பன், க. கள்மணக்கும் பக்கங்கள்: தமிழ் சிந்தனை மரபில் காலமும் வெளியும். முதற்பதிப்பு, காலச்சுவடு பதிப்பகம், 2024.

[3.] ராஜம் கிருஷ்ணன். குறிஞ்சித்தேன். முதற்பதிப்பு, நாம் தமிழர் பதிப்பகம், 2011.

[4.] Soja, Edward W. Thirdspace: Journeys to Los Angeles and Other Real-and-Imagined Places. Blackwell Publishers, 1996. (அல்லது தமிழில்: சோஜா, எட்வர்ட் வில்லியம். Thirdspace: Journeys to Los Angeles and Other Real-and-Imagined Places. Wiley-Blackwell, 1996.)